DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : திரு.கே.கிருஷ்ணன் (உதவி ஆய்வாளர்) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th **June 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் கடந்த 2015ம் வருடம் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்த தங்கதுரை மற்றும் உதவி ஆய்வாளர் முத்துலட்சுமி தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.03.2015ம் தேதி காலை 7.30 மணிக்கு முதல்நிலைக்காவலர் தங்கதுரை சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை

சென்று அங்குசிகிக்சையில் இருந்த முப்பிடாதி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.160/2015 ச/பி. 294(பி),323, 506(2) இதச படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் முத்துலட்சுமி அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.03.2015 ம் தேதி காலை 9.30 மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் கணேஷ்குமார், முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பழனியம்மாள், கணேஷ்குமார், முத்துக்குமார், மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த முதல்நிலைக்காவலர் தங்கதுரை ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். எதிரி மாரியப்பன் என்பவரையும் 14.03.2015 ம்தேதி 12.30 மணிக்கு சங்கரன்கோவில் டிபி முன்பு கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். பின்பு காயம்பட்ட முப்பிடாதி என்பவருக்கு சிசிக்கை அளித்த சங்கரன்கோவில் அரசு மருத்துவர் ஜெயஸ்ரீ என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை

என்றாலும், நான் கூறிய நாள் நேரத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**